1995 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சாதாரணமாக மருத்துவமனைக்கு வரக்கூடியவர்கள் பெரும்பகுதி அந்தத் தேயிலை வாரியத்திலே அல்லது தேயிலைத் தோட்டத்திலே பணியாற்றக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால், அவர்களே அதைப் பார்க்கட்டும் என்று ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், மற்ற இடங்களில் அப்படி இல்லை. தேயிலை தோட்டங்களிலே பயிரிடுபவர்கள் மற்றும் பொது மக்களும் இருக்கிற காரணத்தால், அரசாங்கம் அவர்களையும் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கே ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளும் இருக்கின்றன. எனவே, எங்கெல்லாம் தேயிலைத் தோட்டங்களிலே பணியாற்றுபவர்கள் மட்டும் இருக்கிறார்களோ, அந்த இடத்திலே இருந்து கோரிக்கை வந்தால், அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையை டான்டீ-யிடம் ஒப்படைத்ததாக அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்து இருக்கிறார்கள். எந்த அடிப்படையில் அது கொடுக்கப்பட்டு இருக்கிறது. இனி, அரசு அந்த மருத்துவமனைக்கு ஏதாவது காசு செலவழிக்க இருக்கிறதா, அல்லது முழுமையாக டான்டீ நிறுவனமே அதற்கான பணத்தை முதலீடு செய்து அந்த அரசு மருத்துவமனையை அடாப்ட் செய்து கொண்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அவைக்கு அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றக்கூடியவர்கள்தான் அந்த மருத்துவமனைக்கு பெரும்பகுதியாக வருகிறார்கள். அநேகமாக, எல்லோருமே, அந்த நோயாளிகள்தான் வருகிறார்கள். எனவே, அவர்களே தங்களுடைய பணத்திலே செலவழித்து அந்த மருத்துவமனையை நடத்திக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிடேதான் அது ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 85, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

[1995 நவம்பர் 10

85—

வேலூரில் வேகத்தடைகள் அமைத்தல்

*1961I—**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் பள்ளி, கல்லூரிகள் உள்ள இடங்களில் வேகத்தடை அமைத்து விபத்துக்களைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது நெடுஞ்சாலை மற்றும் தேசீய நெடுஞ்சாலையில் வேகத்தடை அமைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–15

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேகத் தடையைப் பற்றிக் கேட்டால் அமைச்சர் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே கூறியிருக்கிறார்கள். தேசீய நெடுஞ்சாலைகளிலும் மற்றும் ஸ்டேட் ஹைவேஸில் இருக்கக்கூடிய சாலைகளில் கல்லூரிகளும், பள்ளிகளும் இருக்கின்றன. குறிப்பாக வேலூரை எடுத்துக்கொண்டால் நேஷனல் ஹைவேஸில் சத்துவாச்சாரி ஹோலிகிராஸ் என்ற பள்ளியும், ஸ்டேட் ஹைவேஸில் ஊரிஸ் என்ற பள்ளியும் இருக்கின்றன. அந்த இடத்திலே பள்ளிகள் தொடங்குகின்ற போதும் சரி, பள்ளிகள் விடுகின்றபோதும் சரி, பீக் ஹவர்ஸிலே விபத்துக்கள் அதிகமாக நடக்கின்றன. ஹைவேஸில் வேகத்தடை அமைக்கக் கூடாது என்ற விதி இருக்கின்ற காரணத்தினால் ஹைவேஸ் அதிகாரிகள் அங்கு வேகத் தடை அமைக்க மறுக்கிறார்கள். ஆகவே அந்த அதிகாரிகளிடம் பேசி, விதிகளைத் தளர்த்தி வேகத்தடை அமைத்து, விபத்துக்களைத் தடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞானசேகரனுக்கு தடை வருவது மாநில அரசிலிருந்து அல்ல, மத்தியிலே இருந்துதான் வந்து கொண்டிருக்கிறது. தேசீய நெடுஞ்சாலையைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு சில விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று மாநில அரசுக்கு தாக்கீது

1995 நவம்பர் 10]

அனுப்புகிறது. அந்த அடிப்படையிலேதான் 10-2-93-ம் நாளிட்ட கடிதத்தில் தேசீய நெடுஞ்சாலைகளில் வேகத் தடை அமைப்பதற்கு தடை விதித்திருக்கிறது. அதனால்தான் நாங்கள் வேகத்தடை அமைக்க முடியாமல் இருக்கிறோம். நம்முடைய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தமட்டிலே, சாலையோரங்களில் 4 குடிசைகளைப் போட்டுவிட்டு மக்கள் எல்லா இடங்களிலும் வேகத் தடை கேட்கிறார்கள். எங்கெங்கே ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது, பிரச்சினை இருக்கிறது என்று பார்த்துதான் வேகத் தடை அமைக்கமுடியும், எல்லா இடங்களிலும் வேகத் தடை அமைக்கக்கூடாது. அப்படி அமைத்தால் போக்குவரத்து பாதிக்கும், மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படும் என்பதால் மக்களின் நலனைக் கருத்திலே கொண்டு நாங்கள் தடையை வைத்திருக்கிறோம். மாநில நெடுஞ்சாலைகளைப் பொறுத்தமட்டில் எங்கெங்கு வேகத் தடை தேவையோ அந்த இடங்களில் வேகத் தடையை அமைத்துக் கொண்டு தான் இருக்கிறோம். உதாரணமாக வெங்கடேஸ்வரா பள்ளி அருகிலே வேகத் தடை அமைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு வேகத் தடையை அமைக்க தடை விதித்திருப்பதால்தான் இந்த மாதிரி பிரச்சினை வருகிறது. எங்காவது போக்குவரத்து நெரிசல் காரணமாக வேகத் தடை வேண்டும் என்றால், மத்திய அரசின் அனுமதி பெற்று வேகத் தடை அமைத்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது மத்திய அரசு தடை விதித்திருப்பதால்தான் தேசீய நெடுஞ்சாலைகளில் வேகத் தடையை அமைக்க முடியவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய நெடுஞ்சாலையில், குறிப்பாக வெங்கடேஸ்வரா பள்ளிக்கருகில் வேகத் தடை அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சாலையை செப்பனிடும்போது வெங்கடேஸ்வரா பள்ளிக்கருகில் அமைக்கப்பட்டிருந்த வேகத் தடையை அதிகாரிகள் எடுத்துவிட்டார்கள். அதேபோல ஆர்ட்ஸ் கல்லூரிக்கு அருகிலும், கிருஷ்ணசாமி மேல்நிலைப் பள்ளிக்கருகிலும் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய பல இடங்களில் வேகத் தடை இல்லாத காரணத்தினால் பால் மணம் மாறாத பள்ளி மாணவர்கள் விபத்துக்கு ஆளாகக்கூடாது என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் ஹோலிகிராஸ் பள்ளியருகிலும் பணவட்டம் உயர்நிலைப் பள்ளி அருகிலும் வேகத் தடை தேவை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய தேசீய நெடுஞ்சாலைகளில், பள்ளிகள், கல்லூரிகள் இருக்கும் இடங்களில், வேகத் தடை இல்லாத காரணத்தினால் மாணவர்களின் உயிரை வாகனங்கள் பலி கொண்டு போகாமல் தடுப்பதற்கு வேலூரைச் சுற்றியுள்ள மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் தேசீய நெடுஞ்சாலைகளில் இருக்கக்கூடிய பள்ளிகள், கல்லூரிகளின் அருகிலே வேகத் தடையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று கேட்க விரும்புகிறேன். அடுத்து, தேசீய நெடுஞ்சாலையின் வேகத் தடை அமைக்க மத்திய அரசின் அனுமதி பெறவேண்டும் என்பதற்காக நீங்கள் கடிதம் எழுதி...(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேருரை ஆற்றுகிறார்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு உரைதான். கடைசி நாள் தானே...Why you are imposing ban. I will finish.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். அவர் நடைமுறையைத் தான் சொல்கிறார்.

திரு. சி. ஞானசேகரன்: The concerned Minister is prepared to answer, but anyhow, why the other Minister is actually putting ban to me.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் நடைமுறையைச் சொல்கிறார், கொஞ்சம் வரைமுறைப்படி நடக்க வேண்டும் என்று சொல்கிறார். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரைமுறைக்குக் கட்டுப்பட்டுதான் வேகத்தடை அமைக்க வேண்டும் என்று சொல்கிறேன். நானும் வேகமாக போகக்கூடாது, யாரும் வேகமாகப் போகக்கூடாது என்பதற்காகத்தான் கேட்கிறேன். சத்துவாச்சாரி ஹோலிகிராஸ் பள்ளியருகிலும், பனவட்டம் உயர்நிலைப் பள்ளியருகிலும் வேகத் தடை தேவையென்பதை மத்திய அரசுக்கு எழுதி அதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாக என்னுடைய

1995 நவம்பர் 10]

பதிலிலே அவர்களுக்குச் சொன்னேன். தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுததமட்டில், எந்தெந்த இடங்களிலே அமைக்க வேண்டுமென்று அவர் என்னிடத்திலே எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். பல்வேறு இடங்களிலே இதுபோன்ற பிரச்சினைகள் வரும்போது, அரசினுடைய கவனத்திற்கு, அமைச்சரினுடைய கவனத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கொணடு வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அப்படி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்ற நேரத்தில், பல இடங்களில் நாங்கள் அப்படி அமைத்துக் கொடுத்திருக்கிறோம். இது விதிப்படி தளர்த்தக் கூடிய ஒன்றுதான். விதிகளை எதற்காகப் போடுகிறோமென்று சொன்னால் எல்லா இடங்களிலும் இதுபோன்ற பிரச்சினைகள் வந்து விடுகின்றன. ஆகவே எதற்கும் ஒரு வரையறை இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட நெறிமுறைகளை மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் கடைப்பிடித்து வருகிறது. ஆகவே விதிகளைத் தளர்த்த முடியாது என்பதல்ல. தளர்த்த முடியும், அதற்கு அவசியமிருந்தால். ஆகவே இது போன்று போக்குவரத்து செரிவு அதிகமாக உள்ள பகுதியாக இருந்தால், அதைப்போல் அங்கே பள்ளிகள், கல்லூரிகள் போனறவற்றுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமானால், இன்னின்ன சாலைகளில் பிரச்சினைகள் இருக்கின்றன என்று எழுதிக் கொடுக்க வேண்டும். உடனடியாக அரசு ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளிலே பள்ளி மாணவர்கள் நலன் கருதி, மக்களுடைய நலன் கருதி, வேகத் தடைகளை அமைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் **தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையில் வேகத் தடைகள் அமைப்பதற்கும் மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் கேட்க வேண்டுமா? மாநில சர்க்காரே அவசியமான இடத்தில் வேகத் தடையைப் போட்டுவிட்டு, பின்னர் மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்தினால் என்ன? ஏனென்றால் காலதாமதமாகிறது. இதற்கும் மத்திய சர்க்கார் அனுமதி வேண்டுமா? இதில்கூட மாநில சுயாட்சி கிடையாதா? ஆகவே மாநில அரசே தேவையான இடத்தில் செய்துவிட்டு, மத்திய சர்க்காரிடம் அனுமதி கேட்க ஆவன செய்யுமா? கிராம நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளின் தேவையான இடங்களில் வேகத் தடைகள் போடுவதற்கு கலெக்டர், டி.ஈ. எல்லாம் கொண்ட ஒரு கமிட்டி

வைத்திருக்கிறார்கள். ஒரு வருடத்திற்கு ஒரு முறை, 6 மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது. அதற்குள் ஆக்சிடெண்டில் குழந்தைகள், பெரியவர்கள் எல்லாம் இறந்து போகிறார்கள். ஆகவே ஒரு வாரத்திற்குள் அந்தக் கமிட்டி கூடி, தேவையான இடத்தில் வேகத் தடை அமைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைககனி அவர்கள் மிகப் பொறுப்பான கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார். நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல நம்முடைய மாவட்ட நெடுஞ்சாலைத் துறை, மாநில நெடுஞ்சாலைத் துறை பொறுத்தமட்டில், அவர் சொன்னது போல ஏற்கெனவே கமிட்டி வைத்திருக்கிறோம். அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர், டி.ஈ. (Highways) போன்றவர்கள் எல்லாம் இதுபோன்ற பிரச்சினைகள் வரும்போது, அவர்களே முடிவெடுத்து அந்தப் பகுதியில் அமைக்க வேண்டுமென்று இருக்கிறது. சிலநேரங்களில் அவசர நிமித்தம் காரணமாக ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு, விபத்துகள் ஏற்படும் பகுதிகளிலே வேகத்தடை போடுவதற்கு அங்கே இருக்கும் கோட்டப் பொறியாளர் அவர்களே கலெக்டரோடு கலந்து பேசி, கூட்டத்தைக் கூட்டாமல் உடனடியாக அவசர நிமித்தம் காரணமாகப் போட்டுவிட்டு, பின்னர் அனுமதி பெற்றுக் கொள்கிறார்கள். இது நம்முடைய சாலைகளைப் பொறுத்தமட்டிலே. தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் நாம் வேலை செய்கிறோம், மெயின்டெனன்ஸ் செய்கிறோம். ஆனால் கட்டுப்பாடு மைய அரசிடம் இருக்கிறது. நிதி அவர்கள்தான் ஒதுக்குகிறார்கள். அந்தச் சாலைகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் சில வரையறைகளை, நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்லி, தாக்கீதுகள், கடிதங்கள் அனுப்பும்போது இந்த மாநில அரசு சட்டத்திற்குட்பட்டு நாம் பொறுப்பு ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். ஆக அவர் தெரிவித்ததுபோல அவசியம் என்றால் அதை நாம் போட்டுவிட்டுக்கூட, அவர்கள் அனுமதிக்காக எழுதலாம். அவசியம் ஏற்படுகின்ற இடங்களிலேகூட அந்தமாதிரி அவசர நிமித்தம் காரணமாகச் செய்திருக்கிறோம் என்று கூட எழுதலாம். அதில் தவறில்லை. கேட்டுவிட்டுத்தான் செய்ய வேண்டுமென்று விதிமுறை ஒன்றும் கிடையாது. அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். வேகத் தடை அமைக்கக்கூடாது என்று. நாம் போட்டுவிட்டு அவர்களுக்கு எழுதலாம். பொதுமக்கள் நலன் கருதி, இத்தனை விபத்துகள் ஏற்படுகின்றன, பாதிப்பு ஏற்படுகிறது என்று

1995 நவம்பர் 10]

சொல்லி, மாநில அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது, இந்த இடத்தில் அவசியமாகிறது என்று கூட எடுத்து நாம் செய்துவிட்டுக் கூட, மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறலாம். ஆகவே இது ஒரு கடுமையான சட்டம் கிடையாது. அங்கே இருந்து அவர்கள் சில நெறிமுறைகளை அனுப்புகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய தமிழகத்தினுடைடய நெடுஞ்சாலைத் துறையிலே ஆங்காங்கே வேகத் தடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்குக் கலர் இல்லாமல், ரோடு கலரிலேயே இருப்பதால் விபத்துகள் அதிகமாக ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அவற்றுக்கு அபாயக் குறியான சிவப்புக் கலர் அடிக்கப்படுமா அல்லது பளிச் என்று தெரியக்கூடிய வெள்ளைக் கலர் அடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வி போதும், ஒரு துணைக் கேள்வியில் ஒரு கேள்விதான் கேட்கவேண்டும்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கும் வேகத் தடைகள் மிகவும் உயரமாக, ஒரு அடி உயரம் குத்தாக இருக்கிறது. அவைகளை வாட்டமாக அமைப்பதற்கு அமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேகத் தடைகளைப் பொறுத்தமட்டிலே வெள்ளை அடிக்க வேண்டுமென்று ஏற்கனவே இருக்கிறது. சில இடங்களில் அதுபோன்று அடித்தாலும் தொடர்ந்து வாகனங்கள் செல்கிற காரணத்தால் அங்கே அடிக்கிற வெள்ளை பூச்சுக்கள் அழிந்து விடுகிற வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. முதலிலே வெள்ளை அடிக்கிறார்கள். ஒருமாத்திற்குள்ளே தொடர்ந்து அதிகமாக வாகனங்கள், கனரக வாகனங்கள் அந்த வேகத் தடை மீது செல்கிறபோது அந்த வெள்ளை பூச்சுக்கள் அழிந்து விடுகின்றன. ஆகவே வெள்ளை அல்லது மஞ்சள் நிறமாக அடிக்க வேண்டும் என்று இருக்கிறது. சிகப்பு கலர் அடித்தால் வித்தியாசம் தெரியாது. ஏனென்றால் கறுப்பு தார் ரோடுகளில் வெள்ளை அடித்தால்தான் பளிச்சென்று வெகுதூரத்தில்

வருகிறவர்களுக்கும் தெரிவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுபோன்று செய்ய வேண்டுமென்று நாங்கள் ஏற்கெனவே சொல்லி இருக்கிறோம். அதை இனிமேல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல எல்லா இடங்களில் வேகத்தடை இருக்கிற இடங்களில் மிகக் கடுமையாக நம்முடைய அதிகாரிகளுக்குச் சொல்லி ஒரு மாதத்திற்கு ஒரு தடவை அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை அந்தப் பகுதிகளில் இருக்கிற உதவிப் பொறியாளர்கள் கண்காணித்து அந்த வெள்ளை பெயிண்ட் அழிந்து விடுகிறபோது உடனடியாக மறுபடியும் பூச வேண்டுமென்று நான் அதிகாரிகள் மட்டத்தில் நடந்த கூட்டத்தில்கூட பேசி இருக்கிறேன். நம்முடைய குமுளி நெடுஞ்சாலையில் தேனி பகுதியில் நாங்கள் போகிறபோது இதுபோன்று பிரச்சினை வந்தது. ஆகவே அதற்கு பின்னாலேதான் இந்தப் பிரச்சினையை அதிகாரிகளை எல்லாம் கூப்பிட்டு வைத்துச் சொல்லி இருக்கிறோம். ஆகவே தொடர்ந்து அது பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக வேகத்தடைகள் சில இடங்களில் உயரமாக இருக்கின்றன என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். ஏனென்றால் நாமே போகிறபோது சில இடங்களில் நிதானமான உயரத்தில் நெடுஞ்சாலைகளில் போட்டிருப்பதைப் பார்க்கிறோம். அம்பாசிடர், ஜீப்புகள் போகிறபோது பாதிப்பு இருக்காது. கன்டசா, மாருதி 1000 போன்ற கார்கள் எல்லாம் போகிறபோது அவைகளின் அடித்தளம் தாழ்ந்து இருக்கிற காரணத்தால் சில இடங்களில் இதுபோன்ற வாகனங்கள் செல்கிறபோது பிரச்சினை ஏற்படுகிறது என்று எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது அதை மனதில் வைத்து வேகத்தடைகளை அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே தலைமைப் பொறியாளர் நெடுஞ்சாலைக்கும், தேசிய நெடுஞ்சாலைக்கும் அரசின் சார்பில் ஆலோசனை சொல்லி இருக்கிறோம். ஆகவே, அதுபோன்று உயரமாக இருக்கிற பல இடங்களில் மாற்றி இருக்கிறார்கள். சில இடங்களில் ரோடு போடுகிறபோது வேகத்தடைகளை போடாமல் விட்டு விடுகிறார்கள் என்ற புகாரும் வந்திருக்கிறது. அந்த இடங்களில் எல்லாம், எந்தெந்த இடங்களில் ஏற்கெனவே போடப்பட்டிருந்ததோ அவைகளை எல்லாம் ரோடு போட்டு முடிந்தவுடனேயே ஒரு வார காலத்திற்குள்ளே போட வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். ஆகவே இதுபோன்று விதிமுறைகள் எங்காவது மீறப்படுமேயானால் அரசினுடைய உத்தரவுகளை அரசினுடைய இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்று சொல்லப்படுகிற அறிவுரைகளை வேறு எந்தப் பகுதியிலாவது யாராவது